தெரிவிக்க வேண்டும். அம்மூர் பேரூராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரி மண்டலப் போக்குவரத்து அதிகாரிக்கோ, கடன்வசதி கோரி அரசினருக்கோ இதுவரை எந்த மனுக்களும் அனுப்பப்படவில்லை.

தொழிலாளர் நல நிதித் திட்டம்

*** 58 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 'தொழிலாளர் நல நிதித் திட்டம்' அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதன் முக்கிய குறிக்கோள்கள் என்னென்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி உண்டாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம் தொழிலாளர் நலநிதி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்கின்றது. இச்சட்டத்தின் கீழ் அமையவிருக்கும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அந்நிதியின் பொறுப்பு வகிக்கும் அமைப்பாக இருக்கும். இச்சட்டத்தின் 17-வது பிரிவின்படி இவ்வாரியம் நிதியில் நிலைபெற்றுள்ள பணத்தைப்பயன்படுத்தலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தமிழக அரசு அமைத்துள்ள இந்தச் சீரிய திட்டத்தை மேன்மேலும் விரிவுபடுத்தி பணம் இருந்தும் மனம் இல்லாமல் இருக்கும் தொழில் அதிபர்களைத் தூண்டி தொழிலாளர்களுக்கான வசதிகளைப் பெருக்க உரிய திட்டம் வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இதற்காகவே குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அது அமைக்கப்பட்டவுடன் அதற்கான வேலைகள் தொடர்ந்து செய்யப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதற்கான சந்தாத் தொகைகள் 1973 நவம்பரில் பிடித்தம் செய்திருக்கிறார்கள். அந்தத் தொகை முழுவதும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறதா ? மானேஜ்மென்டார் பங்கும் சேர்ந்து வந்திருக்கிறதா ? இதன் பணிகள் எப்போது தொடங்கப்படும் ?

1974 சனவரி 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதற்காக ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பண வசூல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குழு அமைத்துக் கொண்டிருக்கிறோம். குழு அமைப்பது பற்றி முடிவு அறிவித்த வுடன் காரியங்கள் நடைபெறும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பம்பாய்க்கு அடுத்தாற்போல் தமிழ்நாட்டில் இம்மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிறது. அரசு 5 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதோடு முதலாளிகள் இதற்கு கொடுத்த பணம் மற்றவை யெல்லாம் சேர்ந்து கைக்குக் கிடைத்த பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தனிக் கேள்வி போட்டால் விளக்கங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

Labour Legal Advisory Cells

* 59 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have ordered the setting up of any Labour Legal Advisory Cells in this State; and

(*b*) if so; the details thereof.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தொழிலாளர் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது தொடர்பாகத் தொழிலாளர்களுக்கு இலவச ஆலோசனை கூறும் நோக்கத்துடன் தொழிலாளர் சட்ட ஆலோ சனைக் குழுக்கள் மூன்றை சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிலாளர் நீதிமன்றம் ஒன்றில், அல்லது தொழில் நடுவர் மன்றம் ஒன்றில் விசாரணை அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவரும், ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அதிகாரி ஒருவரும் இந்தத் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்களில் பணியாற்றுவர்.

(முற்பகல் 10.00)

திரு. என். டென்னிஸ்: லேபர் லாஸ் படித்தவர்களும், தொழி லாளர் நலனில் அக்கறை உள்ளவர்களும் இதில் அங்கம் வகிப் பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?